OUSL Library.
Donated by.
Dpt. of Secondary & Tertiary education.

வட கொழும்பு கோட்டத்தின் க.பொ.த (சா/த) மாணவர்களின் வரலாறு பாட அடைவில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் பற்றிய ஆய்வு.

Factors influencing the achievement of G.C.E. O/L students in History as a subject with special reference to the Education zone of Colombo – North

PRISCILLA JEBAKANI ROSHAN
B.A (Peradeniya), P G D E (Merit)
Reg. No. 41 1193597

கல்வி முதுமாணிப் பட்ட கற்கை நெறிக்கான பகுதித் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு இவ்வாய்வு சமர்ப்பிக்கப்படுகிறது.

DEPARTMENT OF SECONDARY AND TERTIARY EDUCATION
FACULTY OF EDUCATION
THE OPEN UNIVERSITY OF SRI LANKA
2020

OPEN UNIVERSITY
74779

74779

ஆய்வுச் சுருக்கம்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் முதுகல்விமாணிப் பாடநெறியின் பகுதித் தேவையை பூர்த்தி செய்யும் நோக்குடன் "வட கொழும்பு கோட்டத்தின் க.பொ.த (சா/த) மாணவர்களின் வரலாறு பாட அடைவில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள்" எனும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கல்வித் தரத்தில் எதிர்பார்க்கப்படும் அடைவை பெறாத பிள்ளைகள் குறை அடைவுமட்டம் உள்ள பிள்ளைகளாகக் கருதப்படுகின்றனர்.

வட கொழும்பு கோட்ட பாடசாலைகளில் க.பொ.த (சா/த) பரீட்சையில் வரலாறு பாடத்தில் மாணவர்கள் குறைந்த பெறுபேற்றை பெற்று வந்துள்ளனர். எனவே மாணவரின் வரலாறு பாட அடைவில் செல்வாக்கு செலுத்தும் பாடசாலைக் காரணிகள், வீட்டுக் காரணிகள், தனியாள் சார்ந்த காரணிகளை இனங்காண்பது தொடர்பான ஆய்வு அவசியமான ஒன்றாகக் கருதப்படுகின்றது.

முன்னர் பல்வேறு பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி மாணவரின் அடைவு மட்டத்தில் சமூக, பொருளாதார காரணிகளுடன் வீட்டுக்காரணிகள் பாடசாலைக் காரணிகளும் செல்வாக்குச் செலுத்துவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆய்வானது அளவீட்டு முறையில் அமைந்துள்ளதுடன் மாணவரின் அடைவில் செல்வாக்கு செலுத்தும் பல காரணிகள் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

இந்த ஆய்வினது இலக்கிய மீளாய்வில் அனுபவ ரீதியான ஆய்வுகளின் முடிவுகளும் சஞ்சிகைகள், நூல்கள், பத்திரிகைக் கருத்துக்களும் இடம் பெற்றுள்ளன. பரீட்சை அடைவுகளில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளில் வீட்டுக்காரணி தொடர்பாக மாணவருடன் வீட்டுச் சூழல், குடும்ப அங்கத்தவரின் அறிவு மட்டம், பெற்றோரது தொழில் நிலை, கல்விக்கான செலவு என்பனவும், பாடசாலை காரணி தொடர்பாக ஆசிரியரின் வரலாறு பாட அறிவு, கற்பித்தல் பாங்கு, அதிபரின் தலைமைத்துவம், கல்விக்கான உள்ளீடுகள் என்பனவும், தனியாள் சார்ந்த காரணிகளாக பாடத்தை கற்பதில் ஆர்வம், எதிர்பார்ப்பு என்பவற்றின் கீழ் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வின் இலக்கு குடித்தொகையாக வட கொழும்பு கோட்டம் தரம் 11 வகுப்புக்களைக் கொண்ட தமிழ் மொழிமூலப் பாடசாலைகள் ஏழைக் கொண்டுள்ளதுடன், அவற்றிலிருந்து வரலாறு பாட பெறுபேறுகளின் அடிப்படையில் ஐந்து பாடசாலைகள் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இப்பாடசாலைகளின் அதிபர்கள் 5 பேர், வரலாறு பாட ஆசிரியர்கள் 20 பேர், மாணவர்கள் 140 பேர் மற்றும் பெற்றோர் 25 பேர் ஆய்வுக்கான மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தெரிவு செய்யப்பட்ட 140 மாணவர்களுக்கும், 20 ஆசிரியர்களுக்கும் வினாக்கொத்து வழங்கப்பட்டது. பெற்றோர் மற்றும் அதிபர்கள் நேர்காணலுக்காகத் தெரிவு செய்யப்பட்டனர்.

சேகரிக்கப்பட்ட தகவல்கள் அட்டவணைப்படுத்தப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டு சதவீத அடிப்படையில் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆய்வின் மூலம் பெறப்பட்ட அனுமானங்கள், ஏனைய ஆய்வாளர்களின் ஆய்வுகளுடன் ஒப்பிடப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு இறுதி முடிவு எடுக்கப்பட்டது. அத்துடன் பெற்றோர், பாடசாலை, மாணவர்களுக்கான ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. வட கொழும்பு கல்விக் கோட்டத்தில் க.பொ.த (சா/த) பரீட்சை அடைவுகளை மேம்படுத்த வேண்டுமெனில் மேலதிக கற்றல் வசதிகளை பெற்றுக்கொடுத்தல், சந்தேகம் தீர்த்தல், கற்றலுக்குச் செலவு செய்தல், பாடம் தொடர்பான ஆர்வத்தை அதிகரித்தல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டியது பிரதான பணியாகக் காணப்படுகின்றது.

ஆய்வின் முடிவில் வட கொழும்பு கல்விக் கோட்டத்தின் மாணவர்களது க.பொ.த (சா/த) பரீட்சை அடைவுகளை மேம்படுத்த பெற்றோர்கள், ஆசிரியர்கள், அதிபர்களால் மேற்கொள்ளக்கூடிய நடைமுறைகள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

ஒரு மாணவனது பரீட்சை அடைவுக்கு அவனது வீட்டுச் சூழலும், பாடசாலைச் சூழலும், தனியாள் ஆர்வமும் சிறப்பானவையாகத் திகழ வேண்டும். அப்பொழுதுதான் அவனால் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று தனது ஆற்றலை வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

Abstract

The present study focuses on 'Factors influencing the Achievement of G.C.E.O/L students in History as a subject with special reference to the Education Zone of Colombo North'. The objectives of this research were to discover (I) school related factors (II) home environment related factors (III) individual factors that influence the achievement of students and (IV) to determine the most influencing factor that impacts the achievements of students.

This study was carried out with mixed methods of research design which included quantitative and qualitative approaches. The population of this study consists of G.C.E O/L students attending Tamil Medium schools in North Colombo. This research has been conducted by using a purposive sampling technique that includes one hundred and forty (140) students, twenty (20) teachers, twenty-five (25) parents and five (05) principals of five (05) selected schools. A well-developed questionnaire for students & teachers and scheduled interviews for principals & parents were used for the collection of data. The collected data was analyzed using percentage and descriptive methods of analysis. The major finding revealed by this study was that the most influencing factor of students' achievements was 'home related'.

The Recommendation of this study is that school should create awareness among parents and well wishers to improve home related factors in order to establish a conducive home environment for learning that would contribute towards the higher achievement of students.